**வரையறுக்கப்பட்ட இளைஞர் சேவை தனியார் கம்பெனி - 2018/2019**

---

வரையறுக்கப்பட்ட இளைஞர் சேவை தனியார் கம்பெனியின் (''கம்பெனி'') 2019 மார்ச் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டின் தொழில்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் **154(1)** இல் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154 (6) பிரகாரம் என்னால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென கருதப்படும் எனது அவதானிப்புகள் இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.2 நிதிக் கூற்றுகள் சமர்ப்பித்தல் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் நிருவாக தரப்புகளதும் பொறுப்பு**

---

2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 16(1) பிரிவு பிராகரம், ஒவ்வொரு கணக்காய்வுகளை மேற்கொள்கின்ற நிறுவனத்தாலும் குறித்த நிறுவனம் தொடர்பான வருடாந்த மற்றும் காலோசிதமான நிதிக் கூற்றுகள் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தமது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக உரியவாறு புத்தகங்களையும் அறிக்கைகளையும் பராமரித்தல் வேண்டும். குறித்த சட்டத்தில் **16(2)** பிரிவு பிரகாரம், ஒவ்வொரு கணக்காய்வு செய்யப்படும் நிறுவனம் தொடர்பிலான வருடாந்த நிதிக்கூற்றுகள், விதிகள் மூலம் குறிப்பிடுவதற்கு இயன்ற வகையிலான காலப் பகுதிக்குள், அந்த நிறுவனங்களில் வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகளையும் பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரால் கணக்காய்வாளர் அதிபதியிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். குறித்த சட்டத்தில் **38(1)(ஈ)** பிரிவு பிராகரம, வருடாந்த அறிக்கைகள் மற்றும் ஏனைய நிதிக் கூற்றுகளை தேவையான நேரத்திற்குள் தயாரிக்கப்படுவதாக உறுதிப்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்திற்கு ஏற்புடையதான வருடாந்த அறிக்கைகளை பாராளுமன்றத்திடம் சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலர் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

**2. ஏனைய சட்டத்துடனான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பான அறிக்கைகள்**

---

2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்திலும் 2007 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தில் பின்வரும் தேவைகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2007 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தில் 150 (1) பிரிவு பிரகாரம், ஐந்தொகை திகதி தொடக்கம் 06 மாதங்களிலான காலப் பகுதிக்குள் நிதிக் கூற்றுகளை தயாரிப்பதற்காக பொறுப்பு கூற வேண்டிய நபரால் சான்றுப்படுத்துவதாக கம்பெனியின் பணிப்பாளர் சபையால் சான்றுரைத்தல் வேண்டும்.

**2. நிதிக் கூற்றுகள்**

---

**2.1 நிதிக் கூற்றுகள் கணக்காய்வின் பொருட்டு சமர்ப்பிக்கப்படாமை.**

---

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| **2003** யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க அரச தொழில்முயற்சிகள் கூற்றுநிருபத்தின் **6.5.1** பிரிவு பிரகாரம், அரச கம்பெனிகளில் வருடாந்த நிதி கூற்றுகள் கணக்கு ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், | சம்பந்தப்பட்ட கணக்கு கூற்றுகள் தற்போது தயாரிக்கப்படுவதால் இரண்டு வாரங்களின் பின்னர் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன். | சுற்றறிக்கை பிரகாரம் உரிய திகதியில் கணக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

கம்பெனியால் **2018/2019** கணக்கு ஆண்டுகளுக்கு ஏற்புடையதான நிதிக் கூற்றுகள் கணக்காய்வு திகதியான 2021 பெப்ருவரி 02 ஆந் திகதியிலும், கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

## 2.2 சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் மகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| விடயம் | | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| **சட்டங்கள் விதிகள் ஒழுங்குவிதிகள் என்பவற்றின் தொடர்** | **இணங்காமை** | | |
| (அ) அரச நிதி சுற்றறிக்கை | | | |
| **(i) 2015** யூலை 14 ஆந் திகதிய **03/2015** ஆம் இலக்க சுற்றுநிருபம் | நிமித்த கட்டுநிதி வழங்குதல் பதிவிநிலை தரத்திலான அலுவலர்களுக்கு மட்டும் வரையறுக்கப்படுதல் வேண்டுமாயினும், அதற்கு இணங்காத வகையில் மீளாய்விற்கான ஆண்டில் ஒப்பந்த அடிப்படையின் மீது சேவையில் ஈடுபட்டிருந்த அலுவலருக்கு 09 சந்தர்ப்பங்களில் மொத்தம் ரூபா. **472,415** அன முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. | விசேட கவனம் செலுத்தப்பட்டு நடவடிக்கை மேற்கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| **(ii) 2014** பெப்ருவரி **17** ஆந் திகதி **01/2014** ஆம் இலக்க சுற்றறிக்கை | தொழில்முயற்சிகளின் பொருட்டு குறுகியகால மற்றும் நீண்டகால நோக்குகையுடன் கூடிய இணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | இணைந்த திட்டம் தயாரிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) **2003** யூன் **02** அந் திகதிய பீஈடீ **/12** ஆம் இலக்க அரச தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை | | | |
| **(i) 7.4.5** பிரிவு | **2016** ஆண்டின் பின்னர் கம்பெனியால் பொருட் ஒப்பாய்வு மேற்கொள்ளப்படவில்லை. | செவ்வையாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| **(ii) 9.2** மற்றும் **9.3.1** பந்திகள் | கம்பெனிக்கு பதவியணி ஆட்சேர்பபுச் செய்யவில்லை என்பதுடன், ஆட்சேர்ப்புத் | வினைத்திறனுடன்கூடிய சேவை பெற்றுக்கொள்வதற்கு முடியுமான | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் |

| | | | |
|---|---|---|---|
| | திட்டம் தயாரித்து அங்கீகரிக்கப்படவில்லை. | வகையில் முறையான ஆட்சேர்ப்புத் திட்டம் தயாரிப்பதற்கும், அதற்கு இணங்க எதிர்கால ஆட்சேர்ப்புகளை மேற்கொள்வதற்கம் பணிப்பாளர் சபையிடம் முன்மொழிவினை சமர்ப்பிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது. | வேண்டும். |
| (ஈ) **2018** நவம்பர் **14** ஆந் திகதிய **2/2018** ஆம் இலக்க தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை | சுற்றுநிருபத்திற்கு முரணாக கம்பெனிக்குரிய ரூபா. **1,463,856** பெறுமதியான நிலையான வைப்புகள் தனியார்துறை வர்த்தக வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. | தற்போது மக்கள் வங்கியில் நடைமுறை கணக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 3. தொழில்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) **2015** ஆம் ஆண்டு தொடக்கம் 2020 நவம்பர் 16 ஆந் திகதி வரை வரையறுக்கப்பட்ட இலங்கை இளைஞர் சேவைகள் தனியார் கம்பெனியிடம் வழங்கப்பட்ட 26 கணக்காய்வு ஐயவினாக்களின் பொருட்டு பதில் வழங்கப்படவில்லை. அதேபோன்று குறித்த கணக்காய்வு ஐயவினாக்கள் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைப்பாடுகள் மற்றும் பலவீனங்கள் தொடர்பில், அவற்றை செவ்வையாக்கி கொள்ளுதல் தொடர்பில் பணிப்பாளர் சபை கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | விசேட கவனம் செலுத்தப்பட்டு நடவடிக்கை மேற்கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது.. | கணக்காய்வு ஐயவினாக்களுக்கான பதில்கள் வழங்கப்-படுதல் வேண்டுமென்-பதுடன், அதன் மூலம் சுட்டிக் காட்டப்பட்டு-ள்ள குறைப்பாடு-களை செவ்வையாக்கி கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) வரையறுக்கப்பட்ட இலங்கை இளைஞர் சேவை தனியார் கம்பெனிக்காக கணக்காளர் ஒருவரை நியமனம் செய்து கொள்ளுதல் பொருட்டு 2013 ஆம் ஆண்டு தொடக்கம் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்பதுடன், உதவி கணக்காளர் பதவிகளும் 2019 யூன் 03 ஆந் திகதி வரை வெற்றிடமாக நிலவியது. இந்த | தற்போது கணக்காளர் ஒருவரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. | ஆட்சேர்ப்பு திட்டம் பிரகாரம் வெற்றிட-ங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்-கொள்ளுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| நிலைமை இறுதி நிதிக் கூற்றுகளை, காலோசிதமாக கணக்காயவில் சமர்ப்பித்தலானது தாமதமடைவதற்கு காரணங்களாகின. | | |
| (இ) **2020** ஒக்டோபர் 20 ஆந் திகதியில் அச்சீட்டுப் பிரிவில் ரூபா. **10,520,015** ஆன கடனாளிகளின் மீதி ரூபா. **9,627,122** ஐ அதாவது மொத்த கடன் மீதிக்கு **91.5** % **2015-2019** காலத்திற்கு ஏற்புடையதாக நிலுவை கடனாக காணப்படினும், குறித்த கடன் தொகை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | இதற்கு புறம்பான அலுவலர் ஒருவரை நியமனம் செய்யப்பட்டுள்ளது. | கடனாளிகளின் மீதி அறவிடுதல் தாமத-மின்றி மேற்கொள்-ளுதல் வேண்டும். |
| (ஈ) **2020** யூன் 30 ஆந் திகதியில் தனியார் வங்கியில் வைப்புச் செய்திருந்த பெறுமதி ரூபா. **1,463,856** ஆன நிலையான வைப்புகளுக்கு ஏற்புடையதான வைப்புச் சான்றிதழ் கணக்காய்வில் சமர்ப்பிக்கப்படவில்லை. | நிலையான வைப்புச் சான்றிதழ் தொடர்பாக வங்கியுடன் கலந்துரையாடப்பட்டு விரைவாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும் படி ஆலோசனை வழங்கப்பட்டது. | நிலையான வைப்பு-களின் சான்றிதழ்கள் கணக்காய்விடம் சமர்ப்பிப்பதற்க நடவடி-க்கை மேற்கொள்-ளுதல் வேண்டும். |
| (உ) மாதிரி பரிசோதனைக்கு உட்படுத்திய 05 சந்தர்ப்பங்களில் அலுவலர்களின் கவனயீனம் காரணமாக நிகழ்ந்துள்ள மொத்தம் ரூபா.**1,644,253** ஆன நட்டம் தொடர்பாக பொறுப்பு கூற வேண்டிய அலுவலர்களை அடையாளம் காணப்பட்டு தேவையான நடவடிக்கை மேற்கொள்வதற்கு பணியாற்றியிருக்கவில்லை. | எதிர்வருங் காலத்தில் அவ்வாறு ஏற்படாதிருப்பதற்கு பொறுப்பாக இருப்பதுடன், இது தொடர்பாக விசேட கவனம் செலுத்தும்படி ஆலோசனை வழங்கப்பட்டது. | நட்டம் தொடர்பாக பொறுப்பு கூற வேண்-டிய அலுவலர்கள் தொடர்பில் நடவடி-க்கை மேற்கொள்-ளுதல் வேண்டும். |

**3.2 தொழில்பாட்டு வினைத்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் கம்பெனியில் பிரதானமாக 05 வியாபார நடவடிக்கைகளில் 03 நடவடிக்கைகள் நட்டம் பெற்று வந்ததுடன், குறித்த நிலைமை தவிர்த்துக் கொள்வதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | எதிர்வரும் காலத்தில் இலாபகரமானதாக பேணிச் செல்வதற்கு கவனம் செலுத்தும் படி ஆலோசனை வழங்கப்பட்டது. | தொழில்பாட்டு நடவடிக்கைகள் இலாபம் பெறுகின்ற வகையில் பேணிச் செல்வதற்காக பணிப்பளார் சபையின் கவனம் செலுத்தப்படல் வேண்டும். |

## 4. பேண்தகு அபிவிருத்தி

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஐக்கிய நாடுகளின் அமைப்பினால் **2030** ஆகும் போது தமது அமைப்பிற்குரிய எல்லா நாடுகளிலும் பொருளாதார விருத்தி, சமூக அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு அளிப்பதனை அடிப்படையாகக் கொண்டு அறிமுகப்படுத்திய " பேண்தகு அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் **2030"** இல் தமது விடயவெல்லையின் கீழ் வருகின்ற பேண்தகு அபிவிருத்தி நோக்கங்களை அடையாளம் காணப்பட்டு செயற்படுவதற்கு கம்பெனி பணியாற்றியிருக்கவில்லை. | தற்போது அது தொட-ர்பில் ஏற்புடைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் அமைச்சின் 2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய NP/SP/SDG/17 ஆம் இலக்க சுற்றுநிருபம் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |